தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி,.
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (உழவியல்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 3-3-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## அறுவடை காலத்தில் கேரட்டின் பண்ணை விலை கிலோவிற்கு ரூ.14-16 வரை இருக்கும்.

உலகளவில் காய்கறி உற்பத்தியில் இந்தியா இரண்டாம் இடத்தை வகிக்கிறது. உலக மொத்த உற்பத்தியில் 16 சதவீதம் இந்தியாவில் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தியாவில் 2011-12 ஆம் ஆண்டில் கேரட் 62,220 எக்டரில் பயிரிடப்பட்டு 1.15 மில்லியன் டன்கள் வரை உற்பத்தி செய்யப்பட்டது. இந்தியாவில் உத்திரபிரதேசம், அஸ்ஸாம், கர்நாடகா, ஆந்திரபிரதேசம், பஞ்சாப், ஹரியானா மற்றும் தமிழ்நாடு ஆகியன கேரட் பயிரிடப்படும் முக்கிய மாநிலங்களாகும்.

தமிழ்நாட்டில் 2011-12ம் ஆண்டில் கேரட் 3,252 எக்டரில் பயிரிடப்பட்டது. நீலகிரி (74.82 சதவிகிதம்), திண்டுக்கல் (19.25 சதவிகிதம்), மற்றும் கிருஷ்ணகிரி (4.92 சதவிகிதம்) ஆகியன கேரட் பயிரிடப்படும் முக்கிய மாவட்டங்களாகும். மேட்டுப்பாளையம் மற்றும் ஒசூரில் இருந்து பல்வேறு பகுதிகளில் உள்ள உழவர் சந்தைகள் மற்றும் கமிஷன் கடைகள் மூலம் கேரட் விற்பனை செய்யப்படுகிறது. பிப்ரவரி இறுதி மற்றும் மார்ச் முதல் 2 வாரங்களில் கேரட் விதைக்கப்பட்டு மே மற்றும் ஜூன் மாதங்களில் அறுவடை செய்யப்படுகிறது. தமிழ்நாட்டில் மே மற்றும் ஜூன் மாதங்களில் வரத்து அதிகமாக இருக்கும்.

விவசாயிகள் கேரட் விதைப்பு பற்றிய சரியான முடிவுகளை எடுக்க ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கும் வேளாண் விற்பனை தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் ஆய்வு செய்தது. மேட்டுப்பாளையம் சந்தையில் கடந்த 9 வருடங்களாக நிலவிய விலைகள் ஆய்வு செய்யப்பட்டன. ஆய்வின் முடிவில் அறுவடையின் போது அதாவது மே மற்றும் ஜூன் 2014ல் கேரட்டின் பண்ணை

விலை கிலோவிற்கு ரூ.14-16 வரை நிலவும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. இந்த விலை நிலவரங்களைக் கருத்தில் கொண்டு விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு விவசாயிகள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>:-

*உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,*<br>
*வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,*<br>
*தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,*<br>
*கோயம்புத்தூர்-641003.*<br>
*தொலைபேசி- 0422-2431405*

*மக்கள் தொடர்பு அலுவலர்*